8. என்னுள்ளம் நன்றியால் பொங்கிடுதே

பல்லவி

என்னுள்ளம் நன்றியால் பொங்கிடுதே
இயேசப்பா அன்பை நான் நினைக்கையிலே
காலையில் மாலையில் எவ்வேளையிலும்
எப்போதும் உம்மை துதித்திடுவேன்

சரணங்கள்

1. கிழக்கிற்கும் மேற்க்கிற்கும் எத்தனை தூரம்
அத்தனை தூரம் என் பாவம் நீக்கி விட்டீர்
- என்னுள்ளம்

2. வானத்திற்க்கும் பூமிக்கும் எத்தனை தூரம்
அத்தனை தூரம் என் பாவம் எறிந்து விட்டீர்
- என்னுள்ளம்

3. கடலுக்கும் அதன் ஆழத்திற்கும் எத்தனைதூரம்
அத்தனை தூரம் என் பாவம் புதைத்து வீட்டீர்
- என்னுள்ளம்

4. உம் முதுக்கு பின்னாக எத்தனை தூரம்
அத்தனை தூரம் என் பாவம் மறந்து விட்டீர்
- என்னுள்ளம்